<u>ஒருங்கிணைந்த தினசரி சந்தை</u>

திருவண்ணாமலை நகரப்பகுதியில் காய்கறி சந்தை ஏதுமில்லை. தற்சமயம் கடலைகடை மூலையில் நகராட்சி தெரு மற்றும் சாலை ஓரங்களில் காய்கறி கடைகள் நடத்தப்பெற்று வருகின்றன.இதேபோல் ஜோதி மார்க்கெட் தேரடி வீதியில் பூக்கடைகள் செயல்பட்டு வருமிடமும் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதுடன் தற்போதைய நிலையில் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது.

இந்நகராட்சியில் பழக்கடை சந்தை ஏதும் இல்லை. மேலும் திருவிழாக்காலங்களில் அதிக மக்கட்தொகையால் பெரும் இடநெருக்கடியும், மிகுந்த போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டு வருகிறது.எனவே, இந்நகரின் மையப் பகுதியில் பொது மக்கள் எளிதாக அணுகக்கூடிய இடமாகவும் நகராட்சிக்கு சொந்தமான இடமாகவும் உள்ள காந்திநகரில் வார்டு எண்.2 பிளாக் எண்.14 நகரளவு எண்.1033ல் 2.67 ஏக்கர் காலியிடத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் ஒருங்கிணைந்த காய்கறிச்சந்தை, பூச்சந்தை, பழக்கடைகள் அமைக்க ரூ.29.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டிடத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவை

- இடத்தின் அளவு - 10782 ச.மீ. (2.67 ஏக்கர்)
- தரைத்தளத்தில் – 128 காய்கறி மற்றும் பழக்கடைகள்
- முதல் தளத்தில் – 128 பூக்கடைகள்
- கழிப்பிட அளவு - 122 ச.மீ.
- கடையின் அளவு - 10’ x 11’ மற்றும் 10’3” x 21’6”
- சாய்தள வசதி
- இருசக்கர வாகன நிறுத்துமிட வசதி
- கண்காணிப்பு கேமிரா வசதி
- குடிநீர் வசதி
- மழைநீர் வடிகால்வாய் வசதி
- சாலை வசதி
- உயர்மின் கோபுர வசதி

திருவண்ணாமலை நகராட்சி